**செ.வெ.எண்: 198** **நாள்: 01.04.2025**

# புதுக்கோட்டை மாவட்டம்

## வேளாண் அடுக்கக திட்டத்தில் இதுவரை புதுக்கோட்டை மாவட்டத்தில் 98,921 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர் – மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN) –ல் தொடர்ந்து தவணைத் தொகைகளை பெறுவதற்கு தங்கள் நில விவரங்களை வேளாண் அடுக்கக திட்டத்தில் ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள் பதிவு செய்வது கட்டாயமாகும். விவசாயிகள் கிராமங்களில் நடத்தப்படும் சிறப்பு முகாம்களில் கலந்துகொண்டும், தங்கள் அருகாமையில் உள்ள பொது சேவை மையங்களிலும், தங்கள் நில விவரங்களை கட்டணமின்றி பதிவு செய்தும் பயன்பெறலாம்.

விவசாயிகள் அரசின் பல்வேறு திட்டப்பலன்களைப் பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற தொடர்புடைய ஆவணங்களை ஒவ்வொருமுறையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையிலும் அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாகவும் அனைத்து விவரங்களையும் மின்னணுமுறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் (AgriStack) செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்சமயம் புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் 98,921 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். மேலும், அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் பதிவு செய்திட அனைத்து கிராமங்களிலும் பதிவுகள் மேற்கொள்ளும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, விவசாயிகள் ஆதார் எண், கைபேசி எண், நில உடைமை விவரங்கள் ஆகியவற்றை இணைத்திட சம்பந்தப்பட்ட வருவாய் கிராமத்தில் நடைபெற்று வரும் முகாமில் பங்கேற்று பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விவசாயிகள் நில உடைமை விவரங்கள் இணைக்கப்பட்ட பின்னர் அனைத்து விவரங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆதார் எண் போன்ற தனித்துவமான தேசிய அளவிலான அடையாள எண் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்படும். 2025–26ஆம் நிதி ஆண்டு முதல் பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN) –ல் தொடர்ந்து தவணைத் தொகைகளை பெறுவதற்கு விவசாயிகளின் நில உடமைகளை பதிவு செய்து அடையாள எண் பெறுவது கட்டாயம் ஆகும்.

எனவே, விவசாயிகள் தங்களது கிராமங்களில் வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்களால் நடத்தப்படும் சிறப்பு முகாம்கள், அருகில் உள்ள பொது சேவை மையங்களுக்கு நேரடியாக சென்று தங்கள் நில உடைமை விவரங்கள், ஆதார், கைபேசி எண் ஆகிய விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி 15.04.2025 ஆம் தேதிக்குள் இத்திட்டத்தில் பதிவு செய்து பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai